[2nd February 1966

களிலுள்ள இலாக்காக்களுக்கு தகவல் அனுப்பும்போது அந்தந்தக் கடிதங்களை அந்தந்த ஊர்களில் செல்லுகின்ற பஸ்களில் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யலாம் அல்லவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இண்டியன் போஸ்ட் அன்ட் டெலிகிராப் ஆக்ட் பிரகாரம் அப்படிச் செய்யக்கூடாது.

Madras Chit Funds Act, 1961

* 49 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the observations made by the Madras High Court in a recent Judgment that section 52 of the Madras Chit Funds Act, 1961, is wholly irrelevant for the purpose underlying the Act: and

(*b*) if so, the action proposed to be taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under examination.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : *தலைவர் அவர்களே, இந்த சர்க்கார் அதிகாரம் பெற்ற சிட்டுகளை விட போலிச் சிட்டுகள் தான் நாட்டில் நடமாடிக்கொண்டிருக்கின்றன. இதனால் ஏழைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் ?*

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : *சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால்தான் இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில் முதல் முதலாக இந்தச் சட்டத்தை செய்தோம். அதற்கு முன்பு திருவாங்கூரிலே இதுமாதிரி ஒரு சட்டம் இருந்தது. ஓரளவிற்குத்தான் அது செயல்பட்டது. இப்பொழுது நம்முடைய ராஜ்யம் பூராவும் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தைப் பார்த்துத்தான் டெல்லி ராஜ்ய சர்க்கார் கூட அவ்வாறு செய்திருக்கிறது.*

கனம் சபாநாயகர் : *அப்படி வந்தால் என்ன நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று கேள்வி கேட்கக் கூடாது. இப்படி நடந்திருக்கிறது, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்று கேட்க வேண்டும். இது* hypothetical question.

SRI V. SANKARAN : May we know the reasons given by the High Court for holding that section 52 is fully irrelevant for the purpose underlying the Act?

MR. SPEAKER : The reasons will be there in the judgment.

2nd February 1966]

THE HON. SRI R. VENKATARAMAN : The High Court has said that it is not necessary to have inspection by third parties. The hon. Member should know that section 52 relates to inspection of documents by third parties. The High Court has said that inspection by a Member of the Board and departmental officials is valid. But they have said that inspection by third parties is not necessary.

MR. SPEAKER : The hon. Member has not gone through the judgment. Perhaps the hon. Member wants to know whether the Hon. Minister has studied the judgment.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : போலிச் சிட்டுகள் நடத்தினர்கள் என்று எத்தனை கேஸ்கள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இம்மாதிரி கேள்வி போட்டால் இதற்குத் தனியாக நோட்டீஸ் கொடுத்துதான் கேட்க வேண்டும். ஏனென்றால் ராஜ்யம் பூராவும் எத்தனை போலிச் சீட்டுகள் நடந்திருக்கின்றன, என்ன நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற தகவல் இந்தக் கேள்வியில் இருந்து எழாது.

தமாஷா வரிவிலக்கு

* 50 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் தயாரித்து வெளியிடப்பட்ட "ரத்தத் திலகம்" என்ற திரைப்படத்திற்கு தமாஷா வரிவிலக்கு அளிக்கப் பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகள்

* 51 கேள்வி.—திரு. இராம அரங்கண்ணல் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாநகரில் கார்ப்பரேஷன், புறம்போக்கு, கோயில், சர்க்கார் மராமத்து ஆகிய இடங்களில் முறையே எத்தனை குடிசை வாழ் பகுதிகள் இருக்கின்[illegible] ?